Literacy for a Billion

Movie: Angadi Theru
Year: 2010

Song: Aval Appadi Ondrum
Lyricist: N A Muthukumar

அவள் அப்படி
ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும்
இணை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு
குறை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும்
இணை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு
குறை இல்லை

அவள் பெரிதாய்
ஒன்றும் படிக்கவில்லை
அவளை படித்தேன்
முடிக்கவில்லை
அவள் உடுத்தும் உடைகள்
பிடிக்கவில்லை
இருந்தும் கவனிக்க
மறக்கவில்லை
அவள் அப்படி
ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும்
இணை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு
குறை இல்லை
அவள் நாய்க்குட்டி எதுவும்
வளர்க்கவில்லை

நான் காவல் இருந்தால்

தடுக்கவில்லை
அவள் பொம்மைகள்
அணைத்து உறங்கவில்லை
நான் பொம்மை போல
பிறக்கவில்லை
அவள் கூந்தல் ஒன்றும்
நீளம் இல்லை
அது காற்றில் துளைந்து
மீளவில்லை
அவள் கைவிரல் மோதிரம்
தங்கவில்லை
கை பிடித்திடும் ஆசை
தூங்கவில்லை
அவள் சொந்தம் இன்றி
எதுவும் இல்லை
எனக்கு எதுவும் இல்லை
அவள் அப்படி
ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும்
இணை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு
குறை இல்லை

அவள் பட்டுப் புடவை
என்றும் அணிந்ததில்லை
அவள் சுடிதார் போல
எதுவும் சிறந்ததில்லை
அவள் திட்டும்போதும்
வக்கவில்லை
அந்த அக்கறை போலே
வேறு இல்லை

அவள் வாசம் ரோஜா
வாசம் இல்லை
அவள் இல்லாமல்
சுவாசம் இல்லை
அவள் சொந்தம் பந்தம்
எதுவும் இல்லை
அவள் சொந்தம் இன்றி
எதுவும் இல்லை
அவள் சொந்தம் இன்றி
எதுவும் இல்லை
எனக்கு எதுவும் இல்லை
அவள் அப்படி
ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும்
இணை இல்லை
அவள் அப்படி
ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு
குறை இல்லை
அவள் பெரிதாய்
ஒன்றும் படிக்கவில்லை
அவளை படித்தேன்
முடிக்கவில்லை
அவள் உடுத்தும் உடைகள்
பிடிக்கவில்லை
இருந்தும் கவனிக்க
மறக்கவில்லை

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.